# S V GLOBAL MILL LIMITED

CIN No.: L17100TN2007PLC065226

**28.01.2026**

**BSE Limited**
Listing Department,
P J Towers, Dalal Street,
Mumbai 400 001.

**Scrip Code: 535621**

Dear Sir/Madam,

**Sub: Submission of copies of Newspaper publications Under Regulation 30 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015.**

Pursuant to provisions of Regulation 30 read with Schedule III of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, we enclose herewith the copies of the newspaper advertisement published by the Company in the following newspapers, in respect of the request received from a shareholder under the special window for re-lodgement of transfer requests for physical shares, in accordance with SEBI Circular No. SEBI/HO/MIRSD/MIRSD-PoD/P/CIR/2025/97 dated July 2, 2025.

| Date of Publication | Name of Newspaper | Language of Newspaper |
|---|---|---|
| 28.01.2026 | Financial Express | English |
| 28.01.2026 | Tamil Murasu | Tamil |

We request you to take note of the above in your records.

Thanking you,

Yours faithfully
**For S V Global Mill Limited**

P S RAVISHANKAR Digitally signed by P S RAVISHANKAR
Date: 2026.01.28 17:41:51 +05'30'

**P.S. Ravishankar**
**Company Secretary & Compliance Officer**

Regd. Office : New No. 5/1 (Old No. 3/1), 6th Cross Street, CIT Colony, Mylapore, Chennai 600 004.
Phone : +91 44 2499 7751, 2499 7752 Tele Fax : +91 44 2499 7753; Email: corporate@ethirajgroup.com

## S V GLOBAL MILL LIMITED

**CIN: L17100TN2007PLC065226**

Registered Office: New No 5/1, (Old No 3/1), 6th Cross Street, CIT Colony, Mylapore, Chennai 600004.
Email: secretarial@svgml.com Ph: 044-24997751/5253

Notice is hereby given that pursuant to SEBI Circular SEBI/ HO/ MIRSD/ DOS3/ CIR/P/2018/139 dated 6th November 2018 and SEBI Circular SEBI/HO/MIRSD/MIRSD-PoD/P/CIR/2025/97 dated 2nd July, 2025, a request has been received by the Company from the Proposed Transferee Mr. Girdhar Gupta Somisetty, aged about 58 years residing at 3/274, Bandrala Street, Rajampet, Cuddapah, Andhra Pradesh - 516115 to transfer the below mentioned securities held in the name(s) of the security holder(s) as detailed below, to his/her/their name(s). These securities were claimed to have been purchased by him and could not be transferred in his favour.

| S.No | Folio No | Name of the Shareholder | No of Shares | Certificate No | Distinctive No |
|---|---|---|---|---|---|
| 1 | S0002615 | SURESH P R<br>Add: 33, Vani Vilas Road, Basavangudi, Bangalore 560004. | 100 | 7587 | 16196135-16196234 |
| 2 | L0000414 | LALIT KUMAR JAIN S<br>Add: F5, Lakshmi Apartments, Kothapet, Old Bank Road, Guntur (A.P) 522001. | 100 | 3522 | 5920287-5920386 |

Any person who has a claim in respect of the abovementioned securities, should lodge such claim with the Company at its Registered Office within 30 days from this date along with appropriate documentary evidence thereof in support of such claim, else the Company will proceed to transfer the securities in favour of Mr. Girdhar Gupta Somisetty proposed Transferee, without any further intimation.

**Place : Chennai** **Date : 28.01.2026** **SV Global Mill Limited**

## BEFORE THE HON'BLE NATIONAL COMPANY LAW TRIBUNAL, CHANDIGARH BENCH

**[CP (CAA) No. 4/CHD/HRY/2026]**

**CONNECTED WITH**

**[(CAA) No. 45/CHD/HRY/2025]**

**IN THE MATTER OF SECTIONS 230 TO 232 AND OTHER APPLICABLE PROVISIONS OF THE COMPANIES ACT 2013**

**AND**

**IN THE MATTER OF SCHEME OF AMALGAMATION BETWEEN CIGNITI TECHNOLOGIES LIMITED AND COFORGE LIMITED AND THEIR RESPECTIVE SHAREHOLDERS AND CREDITORS**

**BETWEEN**

**Cigniti Technologies Limited**
**CIN: L72200HR1998PLC129027**
A company incorporated under the provisions of the Companies Act, 1956 and having its registered office situated at Plot No. 13, Udyog Vihar, Phase-IV, Sector-18, Gurugram, Palam Road, Haryana -122015, India.
**Email Id: ct_company.secretary@coforge.com**

**------ Petitioner Company - 1/ Transferor Company**

AND

**Coforge Limited**
**CIN: L72100HR1992PLC128382**
A company incorporated under the provisions of the Companies Act, 1956 and having its registered office situated at Plot No. 13, Udyog Vihar, Phase-IV, Sector-18, Palam Road Gurugram -122015, Haryana, India

## IGI

www.igi.org

# INTERNATIONAL GEMMOLOGICAL INSTITUTE (INDIA) LIMITED

CIN: L46591MH1999PLC118476

Registered Office: 702, 7th Floor, The Capital, Bandra Kurla Complex, Bandra East, Mumbai – 400051, Maharashtra, India.

Email: investor.relations@igi.org | Website:www.igi.org

## EXTRACT OF STANDALONE AND CONSOLIDATED FINANICAL RESULTS FOR THE QUARTER AND TWELVE MONTHS ENDED DECEMBER 31, 2025

*(Amounts in INR millions, unless otherwise stated)*

| Particulars | Standalone | | | | | Consolidated | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Quarter ended December 31, 2025 | Corresponding quarter ended September 30, 2025 | Quarter ended December 31, 2024 | Twelve months ended December 31, 2025 | Year ended December 31, 2024 | Quarter ended December 31, 2025 | Corresponding quarter ended September 30, 2025 | Quarter ended December 31, 2024 | Twelve months ended December 31, 2025 | Year ended December 31, 2024 |
| | (Unaudited) | (Unaudited) | (Audited) | (Unaudited) | (Audited) | (Unaudited) | (Unaudited) | (Audited) | (Unaudited) | (Audited) |
| Total income from operations | 2,619.75 | 2,523.50 | 1,981.44 | 10,073.53 | 8,165.23 | 3,310.47 | 3,162.08 | 2,768.74 | 12,750.83 | 10,884.92 |
| Net Profit for the period/ year (before tax) | 1,809.84 | 1,824.58 | 1,456.48 | 7,318.66 | 5,868.27 | 1,882.36 | 1,754.85 | 1,527.79 | 7,301.63 | 5,853.20 |
| Net Profit for the period/ year (after tax) | 1,314.97 | 1,391.27 | 1,116.82 | 5,472.47 | 4,392.49 | 1,345.50 | 1,297.93 | 1,137.75 | 5,316.01 | 4,272.90 |
| Total Comprehensive income for the period/ year (Comprising Profit/Loss) for the period (after tax) and Other comprehensive income (after tax) | 1,313.30 | 1,389.61 | 1,132.37 | 5,462.40 | 4,378.89 | 1,383.14 | 1,375.39 | 1,122.93 | 5,552.17 | 4,336.18 |
| Paid up Equity Share Capital (Face value of ₹ 2 per share) | 864.32 | 864.32 | 864.32 | 864.32 | 864.32 | 864.32 | 864.32 | 864.32 | 864.32 | 864.32 |
| Reserves excluding revaluation reserve as at Balance Sheet date | | | | 24,390.51 | 21,010.56 | | | | 13,232.89 | 9,763.17 |
| Earning per share: | | | | | | | | | | |
| 1. Basic (in ₹) (not annualised) | 3.04 | 3.22 | 2.81 | 12.66 | 11.04 | 3.11 | 3.00 | 2.86 | 12.30 | 10.74 |

Activate Windows
Go to Settings to activate Windows.

தமிழ் முரசு



சென்னை குடிநீர் வாரியம் சார்பில், நீலாங்கரை பகுதி மக்களின் குடிநீர் தேவைக்காக இசிஆர் பிரதான சாலையில் புதிதாக கட்டப்பட்டுள்ள பிரம்மாண்ட தண்ணீர் தொட்டி.

புளியங்குடி காவல்நிலையத்தில்

# தந்தை, மகள் விஷம் குடித்தனர்

## தீவிர சிகிச்சை அளிப்பு

**புளியங்குடி, ஜன.28–** தென்காசி மாவட்டம் புளியங்குடி கிழக்கு புதுமனை 1வது தெருவை சேர்ந்தவர் முகம்மது கனி (70). இவரது மனைவி இறந்துவிட்டார். இதனால் மகள் சித்திகா (40) வுடன் வசித்து வருகிறார். சித்திகாவின் கணவர் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார். இந்தநிலையில் முகம்மதுகனி, சித்திகா ஆகியோர் சட்டவிரோதமாக புகையிலை பொருட்கள் விற்பனை செய்வதாக போலீசாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து முகம்மது கனி, சித்திகா ஆகியோரை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று போலீசார் விசாரணை நடத்தியுள்ளனர். அப்போது முகம்மதுகனியிடம் அவரது மகள் சித்திகாவின் ஆதார் அட்டையை எடுத்து வரச் சொல்லி அனுப்பி வைத்துள்ளனர்.

இதன்பின்னர் காவல் நிலையத்தில் இருந்து வெளியே வந்த முகம்மது கனி அங்குள்ள கடையில் பூச்சி மருந்து வாங்கிவந்து குடித்துள்ளார். நேராக காவல் நிலையத்திற்கு வந்த மகளிடம் மருந்தை கொடுத்ததும் அவர் காவல்நிலைய கழிவறைக்கு சென்று பூச்சி மருந்தை குடித்துவிட்டார். இதையடுத்து அடுத்தடுத்து மயங்கிவிழுந்த தந்தை, மகள் ஆகியோரை மீட்டு புளியங்குடியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்து தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இதுகுறித்து போலீசார் விசாரிக்கின்றனர்.

மூதாட்டி கொலை வழக்கில்

# தொழிலாளிக்கு ஆயுள் சிறை

**சேலம், ஜன.28–** சேலம் மாவட்டம் தலைவாசல் அருகே உள்ள பள்ளிபாளையம் கிராமத்தை சேர்ந்தவர் மாணிக்கம்(46). கூலித் தொழிலாளி. இவர் கடந்த 2017ம் ஆண்டு 72 வயது மூதாட்டியை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றார். அந்த மூதாட்டி தடுத்த நிலையில் அவரை கழுத்தை நெரித்து கொலை செய்துவிட்டார்.

இதுகுறித்த புகாரின்பேரில் தலைவாசல் போலீசார் வழக்குபதிவு செய்து மாணிக்கத்தை கைது செய்தனர். இந்த வழக்கு சேலம் மகளிர் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. அரசு தரப்பில் வக்கீல் பத்மா ஆஜரானார். இந்த நிலையில், இவ்வழக்கை விசாரித்த நீதிபதி ஜெயசிங், கூலித் தொழிலாளி மாணிக்கத்துக்கு ஆயுள் தண்டனை மற்றும் ரூ.1000 அபராதம் விதித்தார். இதையடுத்து மாணிக்கத்தை சிறையில் அடைத்தனர்.

# கற்பக விருட்ச வாகனத்தில் நம்பெருமாள் நகர்வலம்


## நாளை நெல்லளவு வைபவம்

**திருச்சி, ஜன.28–** ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் தைத்தேர் திருவிழாவின் 6ம் நாளான இன்று காலை நம்பெருமாள் கற்பக விருட்ச வாகனத்தில் வீதியுலா நடந்தது. நாளை உபயநாச்சியார்களுடன் நெல்லளவு கண்டருள்கிறார்.

‘பூலோக வைகுண்டம்’ என போற்றப்படுவதும் 108 வைணவ தலங்களில் முதன்மையானதுமான திருச்சி ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் தைத்தேர் திருவிழா கடந்த 23ம்தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது. விழாவையொட்டி தினமும் காலை, மாலை பல்வேறு வாகனங்களில் நம்பெருமாள் வீதியுலா நடக்கிறது.

நேற்றிரவு அனுமந்த வாகனத்தில் புறப்பாடு நடந்தது.

6ம் திருநாளான இன்று அதிகாலை 4.15 மணிக்கு நம்பெருமாள் சிறப்பு அலங்காரத்தில் கற்பக விருட்ச வாகனத்தில் புறப்பட்டு உள்வீதி வலம் வந்தார். தொடர்ந்து பல்லக்கில் புறப்பட்டு வழிநடை உபயம் கண்டருளி சுக்ரவாரதோப்பு ஆஸ்தான மண்டபத்தில் எழுந்தருளினார். திரளான பக்தர்கள் கலந்துகொண்டு நம்பெருமாளை தரிசித்தனர். பின்னர் மாலை 5 மணிக்கு அங்கிருந்து தோளுக்கினியானில் புறப்பட்டு யானை மண்டபம் வந்தடைந்தார். இரவு 8 மணிக்கு யானை வாகனத்தில் புறப்பாடு நடக்கிறது.



விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக நாளை மாலை 6.30 மணிக்கு உபயநாச்சியார்களுடன் நம்பெருமாள் ‘நெல் அளவு கண்டருளும்’ வைபவம் நடக்கிறது. 30ம்தேதி மாலை குதிரை வாகனத்தில் வையாளி கண்டருளுகிறார். முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் 31ம் தேதி நடைபெறுகிறது. 3ம்தேதி நம்பெருமாள் ஆளும்பல்லக்குடன் விழா நிறைவடைகிறது.

ஜனவரி 28, 2026 புதன்கிழமை

# பலத்த பதிலடி

காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் கடந்த 2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 26 பேர் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடியாக, இந்திய ராணுவம் அதே ஆண்டு மே மாதம் ‘ஆபரேஷன் சிந்தூர்’ என்ற பெயரில் எல்லை தாண்டிய நடவடிக்கையை மேற்கொண்டது.

இந்நிலையில், கடந்த ஜனவரி மாதம் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், பாகிஸ்தானை மிக மோசமான அண்டை நாடு என்றும், முக்கிய நகரங்களில் தீவிரவாத பயிற்சி முகாம்களை பாகிஸ்தான் வெளிப்படையாக நடத்துவதாகவும் கடுமையாக விமர்சித்திருந்தார். இத்தகைய எல்லை தாண்டிய காட்டுமிராண்டித்தனத்தில் இருந்து இந்திய குடிமக்களைப் பாதுகாக்க இந்தியாவுக்கு முழு உரிமை உண்டு எனவும் அவர் உறுதியாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சிலில் சமீபத்தில் நடந்த சர்வதேச சட்ட விதிகள் தொடர்பான விவாதத்தில் பங்கேற்ற ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி பர்வதநேனி ஹரிஷ் மிகக் கடுமையான பதிலடியை வழங்கினார். ‘தீவிரவாதத்தை அரசு கொள்கையின் கருவியாக பாகிஸ்தான் தொடர்ந்து பயன்படுத்துவதை சகித்துக் கொள்வது என்பதை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. இந்தியாவிற்கும் அதன் மக்களுக்கும் தீங்கு விளைவிப்பதே பாகிஸ்தானின் ஒரே நோக்கமாக உள்ளது. பஹல்காம் தாக்குதலுக்குப் பிறகே இந்தியா தரப்பில் பொறுப்பான பதில் வழங்கப்பட்டது. பாகிஸ்தானின் எல்லை தாண்டிய தீவிரவாதத்திற்கு தனது ஆதரவை நம்பகமான மற்றும் மாற்ற முடியாத வகையில் முடிவுக்குக் கொண்டுவரும் வரை, 65 ஆண்டுகள் பழமையான சிந்து நதிநீர் ஒப்பந்தம் நிறுத்தி வைக்கப்படும். மேலும், தனது சொந்த நாட்டில் சட்டத்தின் ஆட்சியைப் பற்றி பாகிஸ்தான் சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும்’ என்றார்.

அத்துடன், ஐ.நா.வையும் விமர்சித்துள்ளார். ‘தற்போது சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள புவி அரசியல் சவால்களில் துணிச்சலான நடவடிக்கை எடுக்கும் அளவுக்கு ஐ.நா. செயல்படவில்லை. உலக நாடுகளிடம் அமைதி, பாதுகாப்புக்கு ஏற்ற அமைப்பாக ஐ.நா.வை உலக மக்கள் கருதவில்லை. சர்வதேச சட்டதிட்டங்களை அனைவரும் மதித்து நடக்க வேண்டும். இதில் எந்த நாடும் இரட்டை வேடம் போடக் கூடாது. அதேநேரம் சர்வதேச சட்டதிட்டங்கள் என்பது, ஒரு நாட்டின் இறையாண்மையை தாக்குவதற்கோ, உள்நாட்டின் பிரச்னைகளில் தலையிடுவதற்கோ அனுமதிக்க கூடாது’ என்றார்.

ஐ.நா.வில் இருந்து விலகுவதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கடந்த வாரம் அறிவித்தார். அத்துடன், ஐ.நா.வுக்கு மாற்றாக, ‘போர்டு ஆப் பீஸ்’ என்ற அமைப்பை தொடங்கினார். இதில் உறுப்பினராக இந்தியா உட்பட உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்தார். அதிபர் ட்ரம்ப்பின் தலைமையில் இயங்கும் இந்த அமைப்பில், அர்ஜென்டினா, அர்மீனியா, அஜர்பைஜான், பஹ்ரைன், பல்கேரியா, ஹங்கேரி, இந்தோனேசியா, ஜோர்டான், கஜகஸ்தான், கொசாவோ, மங்கோலியா, மொராக்கோ, பாகிஸ்தான், பராகுவே, கத்தார், சவுதி, துருக்கி, ஐக்கிய அரபு எமிரேட், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் சேர்ந்துள்ளன. ஆனால், இந்தியா மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் அதில் சேரவில்லை.

இந்நிலையில், ஐ.நா.வின் செயல்பாடுகள் குறித்து இந்தியா விமர்சித்துள்ளதோடு அரசின் கொள்கையாக தீவிரவாதத்தை பயன்படுத்துவதை சகித்துக் கொள்ள முடியாது என இந்தியா திட்டவட்டமாக தெரிவித்து பாகிஸ்தானுக்கு பலத்த பதிலடி கொடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

நடைபயணத்தில் பங்கேற்க

# புதுச்சேரிக்கு ராகுல் வருகிறார்

**புதுச்சேரி, ஜன.28–** புதுச்சேரியில் ஆளும் என்.ஆர்.காங்கிரஸ் - பாஜக அரசின் செயல்பாடுகளை கண்டித்தும் புதுச்சேரியில் நேர்மையான நிர்வாகத்தை அளிப்பது, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது, பொதுச் சொத்துகளைப் பாதுகாப்பது, அதிகாரத்தில் இருப்பவர்களிடம் இருந்து மக்களைக் காப்பாற்றுவது என்ற குறிக்கோளுடன் புதுச்சேரியில் உள்ள 23 தொகுதிகளில் காங்கிரஸ் சார்பில் பாதயாத்திரை கடந்த 21ம் தேதி முதல் நடந்து வருகிறது.

இதுகுறித்து புதுச்சேரி காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் எம்.பி கூறியதாவது:

புதுச்சேரி முத்தியால்பேட்டையில் தொடங்கிய



இந்த நடைபயணம் புதுவை பிராந்தியத்தில் உள்ள 23 தொகுதிகளிலும் நடக்க உள்ளது. இந்த நடைபயணத்தில் கலந்துகொள்ள ராகுல் காந்தி வரும் பிப்ரவரியில் புதுச்சேரி வருகிறார். ராகுல், பிரியங்கா, கார்கே ஆகியோர் புதுச்சேரி சட்டமன்ற தேர்தலுக்கு வருகிறார்கள்.

லாட்டரி அதிபர் மார்டின் மகனான ஜோஸ் சார்லஸ், முழுமையாக லாட்டரி சீட்டை இந்தியா முழுக்க தடை செய்ய சொல்வாரா? கேசினோவை கொண்டு வரமாட்டோம் என வாக்குறுதி தருவாரா? நாங்க இந்தி திணிப்பை கொண்டுவரவில்லை. பாஜகதான் செய்கிறது. அதில் சேரதான் ஜோஸ் சார்லஸ் விரும்புகிறார்.

கட்சி கட்டளையிட்டால் மண்ணாடிப்பட்டு தொகுதியில் போட்டியிடுவேன். கடந்த 2016ல் ஓடாத மிக்சி, கிரைண்டர் கொடுத்து ஜெயிக்கலாம் என்று ரங்கசாமி பார்த்தார். தற்போது ரூ.2500ஐ கொடுத்து ஜெயிக்கலாம் என்று பார்க்கிறார். இதற்கு மக்கள் ஏமாறமாட்டார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

தந்தையுடன் பைக்கில் சென்றபோது

# மாஞ்சா நூல் கழுத்தை இறுக்கி 5 வயது சிறுமி பரிதாப பலி

**திருமலை, ஜன. 28–** மாஞ்சா நூல் கழுத்தில் சிக்கி 5 வயது சிறுமி பரிதாபமாக இறந்தார். தந்தையுடன் பைக்கில் செல்லும்போது இது நடந்துள்ளது.

தெலங்கானா மாநிலம் ஐதராபாத் குகட்பள்ளி பகுதியில் வசிப்பவர் ராம்சாகர். இவர் தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். இவர், காசிப்பள்ளி பகுதியில் வாங்கியுள்ள வீட்டில் அலங்கார வேலைபாடுகள் நடைபெற்று வருகிறது. நேற்று ராம்சாகர், தனது மகள் நிஷ்விகாதர்யா(5)வுடன் பைக்கில்



நிஷ்விகாதர்யா.

புதிய வீட்டில் நடைபெற்று வரும் வேலைகளை பார்க்க சென்றுள்ளார். அங்கிருந்து கேபிஹெச்பி காலனியில் உள்ள ஒரு நகைக்கடைக்கு சென்றுள்ளார். விவேகானந்தநகர் காலனி அருகே சென்றபோது பறந்துவந்த காற்றாடி நூல் சிறுமியின் கழுத்தில் சிக்கி அறுத்துவிட்டது. சிறுமியின் கதறியதால் பைக்கை நிறுத்தி ராம்சாகர் பார்த்ததும் அதிர்ச்சி அடைந்தார். உடனடியாக அருகிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தார். தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், சிறுமி நிஷ்விகாதர்யா பரிதாபமாக இறந்தார்.

இதுகுறித்த போலீசார் விசாரிக்கின்றனர்.

# திமுகவை எதிர்க்கின்ற வலிமை எந்த கூட்டணி கட்சிக்கும் இல்லை

## திருமாவளவன் பேச்சு

**காட்டுமன்னார்கோவில், ஜன.28–** கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில் அருகே நாடாளுமன்ற தொகுதி நிதியின்கீழ் கிழவன்னியூர் எம்ஜிஆர் அரசு கலை அறிவியல் கல்லூரி வளாக புதிய நுழைவுவாயில், புதிய அரசு கட்டிடங்கள் திறப்பு விழா நேற்று நடந்தது. இதில் சிதம்பரம் தொகுதி எம்.பி. திருமாவளவன் கலந்துகொண்டு கட்டிடங்களை திறந்து வைத்து கூறியதாவது:

தமிழகத்தில் 2026 சட்டபேரவை தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மகத்தான வெற்றியை பெறும். 2011 பொது தேர்தலுக்குபின் நாங்கள் உறுதிபட தெரிவித்த நிலைப்பாடு, சாதிய மதவாத அரசியல் கட்சிகளோடு ஒருபோதும் கூட்டணி வைத்துக் கொள்ள மாட்டோம். அந்த கட்சியில் இடம்பெறும் கூட்டணியிலும் இருக்க மாட்டோம் என்று அறிவித்தோம். அந்த நிலைப்பாட்டில் என்றும் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.



திமுக கூட்டணியில் எந்தெந்த கட்சிகள் சேர வேண்டும் என்பது குறித்து திமுக தலைமைதான் முடிவு எடுக்க வேண்டும். இந்த கட்சியை சேர்க்க வேண்டும், இந்த கட்சியை சேர்க்கக் கூடாது என்று விசிக நிர்ப்பந்தம் செய்யாது. நாங்கள் எங்கள் நிலைப்பாட்டில் உறுதியாக இருப்போம் என்பதை தவிர திமுகவுக்கு ஆலோசனை சொல்லக்கூடிய இடத்தில் அல்லது நெருக்கடி தரக்கூடிய இடத்தில் நாங்கள் இல்லை. எந்த ஒரு கட்சியின் மீதும் தனிப்பட்ட வெறுப்பு எங்களுக்கு கிடையாது. கொள்கை சார்ந்த நாங்கள் எடுத்த முடிவில் உறுதியாக இருந்தால்தான், என்னுடைய தலைமையை ஏற்றுக் கொண்ட எங்கள் கட்சி தோழர்களும்என் மீது வைத்துள்ள நம்பகத் தன்மையை காப்பாற்ற முடியும்.

திமுக கூட்டணியை எதிர்க்கிற வலிமை எந்த கூட்டணிக்கும் தமிழ்நாட்டில் இல்லை. அதிமுக பாஜக ஒரு கூட்டணியை உருவாக்கி இருக்கிறது. ஏற்கனவே இருந்து வெளியேறிய கட்சிகளை இப்போது சேர்த்துள்ளார்கள். அவ்வளவுதான்.

அண்மையில் மதுராந்தகத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய மோடி, மறந்தும் ஒருமுறை கூட அதிமுக தலைமையிலான கூட்டணி என்று சொல்லவே இல்லை. இதுதான் இன்றைக்கு அதிமுகவின் நிலைமை. திமுக தலைவரை, மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியை எதிர்த்து போட்டியிடக் கூடிய வலிமை பெற்ற ஒரு கட்சியும் இல்லை. ஒரு கூட்டணியும் இல்லை. திமுக கூட்டணி கட்டுக்கோப்பாக இருக்கிறது, வலிமையோடு இருக்கிறது. வெற்றிகரமாக இந்த தேர்தலை சந்திக்கும் என்கிற நம்பிக்கையோடு இருக்கிறது. இவ்வாறு கூறினார்.


**S V GLOBAL MILL LIMITED**

**CIN: L17100TN2007PLC065226**

Registered Office: New No 5/1, (Old No 3/1), 6th Cross Street, CIT Colony, Mylapore, Chennai 600004.
Email: secretarial@svgml.comPh: 044-24997751/52/53.

Notice is hereby given that pursuant to SEBI Circular SEBI/ HO/ MIRSD/ DOS3/ CIR/P/2018/139 dated 6th November 2018 and SEBI Circular SEBI/HO/MIRSD/MIRSD-PoD/P/CIR/2025/97 dated 2nd July, 2025, a request has been received by the Company from the Proposed Transferee Mr. Giridhar Gupta Somisetty, aged about 58 years residing at 3/274, Bandralla Street, Rajampet, Cuddapah, Andhra Pradesh - 516115 to transfer the below mentioned securities held in the name(s) of the security holder(s) as detailed below, to his/her/their name(s). These securities were claimed to have been purchased by him and could not be transferred in his favour.

| S.No | Folio No | Name of the Shareholder | No of Shares | Certificate No | Distinctive No |
|---|---|---|---|---|---|
| 1 | S0002615 | SURESH P R Add: 33, Vani Vilas Road, Basavangudi, Bangalore 560004. | 100 | 7507 | 16196135-16196234 |
| 2 | L0000414 | LALIT KUMAR JAIN S Add: F5, Lakshmi Apartments, Kothapet, Old Bank Road, Guntur (A.P) 522001. | 100 | 3522 | 5920287-5920386 |

Any person who has a claim in respect of the abovementioned securities, should lodge such claim with the Company at its Registered Office within 30 days from this date along with appropriate documentary evidence thereof in support of such claim, else the Company will proceed to transfer the securities in favour of Mr. Giridhar Gupta Somisetty proposed Transferee, without any further intimation.

**Place : Chennai** **Date : 28.01.2026** **SV Global Mill Limited**


பாலமுருகன் கோயிலில் தை கிருத்திகை

# கொதிக்கும் எண்ணெய்யில் கையால் வடைசுட்டு பக்தர்கள் நேர்த்திக்கடன்



தை கிருத்திகை விழாவில் கொதிக்கும் எண்ணெய்யில் பக்தர்கள் கையால் வடை சுட்டனர்.

**கலசப்பாக்கம், ஜன.28–** திருவண்ணாமலை மாவட்டம் கலசப்பாக்கம் அடுத்த மங்கலம் கிராமத்தில் ஸ்ரீபாலமுருகன் கோயிலில் தை கிருத்திகையொட்டி தேர்த்திருவிழா நடைபெற்றது. இதையொட்டி சுவாமிக்கு பாலாபிஷேகம் நடந்தது. முன்னதாக பக்தர்கள் பால்குடம் ஏந்தி ஊர்வலமாக கோயிலுக்கு வந்தனர். சுவாமிக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து விரதம் இருந்த பக்தர்கள் கொதிக்கும் எண்ணெய்யில் கையால் வடை சுட்டு எடுத்தல், முதுகில் அலகு குத்தி மரச்செக்கு இழுத்தல், காவடி ஏந்தி தங்களது நேர்த்திக்கடன்களை செலுத்தினர். கொதிக்கும் எண்ணெய்யில் கையால் சுடப்பட்ட வடையை சுவாமிக்கு படையலிட்டு, பக்தர்களுக்கு வழங்கினர். பக்தர்கள் முதுகில் அலகு குத்தி அந்தரத்தில் தொங்கியபடி சுவாமிக்கு மாலை அணிவித்தும்பூந்தேர் இழுத்தும் நேர்த்திக்கடன் செலுத்தினர். இதன்பிறகு வள்ளி திருமணம், வாணவேடிக்கை நடைபெற்றது.

# சிறுமிக்கு பாலியல் தொல்லை முதியவருக்கு 25 ஆண்டு சிறை

**சேலம், ஜன.28–** 6 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்த முதியவருக்கு 25 ஆண்டு சிறை தண்டனை விதித்து சேலம் போக்சோ நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

சேலம் ஆத்தூர் அருகேயுள்ள கெங்கவல்லி ஜெல்ஜியம் காலனியை சேர்ந்தவர் சாந்தப்பன் (70). இவர் கடந்த ஆண்டு 6 வயது சிறுமிக்கு பாலியல் தொந்தரவு கொடுத்துள்ளார். இதுசம்பந்தமாக கொடுக்கப்பட்ட புகாரின்பேரில், ஆத்தூர் மகளிர் போலீசார் வழக்குபதிவு செய்து போக்சோ சட்டத்தின் கீழ் சாந்தப்பனை கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த வழக்கு சேலம் போக்சோ நீதிமன்றத்தில் நடைபெற்றது. இந்த நிலையில், இந்தவழக்கை விசாரித்த நீதிபதி தீபா, குற்றவாளி சாந்தப்பனுக்கு 25 ஆண்டு சிறை தண்டனையும் 1500 ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பு கூறினார்.




தமிழ் செய்தி வாசிப்பாளர்கள் சங்கம் சார்பில் 77 வது குடியரசு தின விழா பெரம்பூர் வீனஸ் அருகில் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பிரபல நடிகர் டத்தோ. ராதா ரவி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். Dr. உத்தம் சந்த் கட்டாரியா நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகளை தொடங்கி வைத்தார். இதில் தமிழ் செய்தி வாசிப்பாளர்கள் சங்கத் தலைவர் பிரபுதாசன், துணைத் தலைவர் மோகன்ராஜ் மற்றும் அனைத்து தொலைக்காட்சிகளின் பிரபல செய்தி வாசிப்பாளர்களும் பங்கு பெற்றனர்.

advt*


Printed and published by **R.M.R. Ramesh** on behalf of Kal Publications Private Limited and printed at Dinakaran Press, (Owned by Kal Publications Pvt. Ltd.,), Plot No.170. No.10, First Main Road, Nehru Nagar, Perungudi, Chennai - 600 096 and Published at 229, Kutchery Road, Mylapore, Chennai - 600 004. Ph.4220 9191. Fax: 4220 9200/01 Editor: **R.M.R. Ramesh**. RNI Regn. No. 24428/1973